

சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் மேற்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசு சாதனை விளக்க பொதுகூட்டம் அ.சாந்தகுமார் ராயபுரம் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் கரூர் முரளி குமரி பிரபாகரன் மு.மு. முஸ்தாக் ஆகியோர் உரையாற்றினார். இதில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர் டி சேகர் எம்.எல்.ஏ., வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஆர்.கே.நகர் சட்ட மன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர், ராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், லயோலா கே மதன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, எஸ். புகழேந்தி, இரா.பாலன், எம்.ரவி, கொரியர் பி.முருகன், பாலலட்சுமணன், ஜெ. கௌரீஸ்வரன். நன்றியுரை கா. சீனிவாசன் வ.மொய்தீன், கு.கௌரிநாதன், பி.விஷால் ஆனந்த், அ.சந்துரு, மற்றும் மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம்,இராயபுரம் கிழக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் என்.அப்துல்மாலிக் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, முன்னிலையில் த.வெ.க.கட்சியைச் சேர்ந்த மாவட்ட கொள்கை பரப்பு துணை பொருளாளர் கே.பிரவின் 50 பேர்களுடன் கழகத்தில் இணைத்தனர்.உடன் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம். எல்.ஏ,பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லயோலா கே.மதன், ப.சோமசுந்தரமூர்த்தி, தா.ஜெயபாலன், பி.சேகர்,கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, காட்டன் ஜி.சதிஷ்குமார், மு.வினோத்குமார், என். சுனில்குமார், எம்.அருண்பிரபாகரன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். சிமென்.இரா.நரேஷ் நன்றி கூறினார்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 140வது நாள்!

## அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூலை 10-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 140 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு இன்று (09.7.2025) அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1)வட்டம் 84 ஆ, பஜனை கோயில் தெரு, பட்டரவாக்கம். 2)வட்டம் 84, கொரட்டூர் பேருந்து



நிலையம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி. எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/ கிழக்கு வடக்கு/தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி. செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம். கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2க்கு உட்பட்ட 16வது வார்டு பாரதி நகர் 17 வது வார்டு சுபம் நகர் 20வது வார்டு கீழ்க்கட்டளை ஆகிய பகுதிகளில் ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட அங்கன்வாடி மையங்களை மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார் அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் இ. எஸ்.பெர்னார்ட், கோ. ஜானகிராமன், மாமன்ற உறுப்பினர்கள் எஸ். நெடுஞ்செழியன், சே.முத்துக்குமார், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் சங்கர் உதவி பொறியாளர் பழனி வட்டக் கழகச் செயலாளர்கள் மை. அந்தோணி, டி. எச்.பிரான்சிஸ், பால் எம். முருகையன் என்கிற சங்கீத்குமார் பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.சேகர், இ.கஜேந்திரன், சரத் வெங்கடேசன், நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் மாநகராட்சி ஊழியர்கள் ஆகியோர் இருந்தனர்



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணையையேற்று நம் மண், மொழி, மானம் காக்க "ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, 57 (அ) வட்டம், பாகம் எண். 124 யில் மேற்கு பகுதிச் செயலாளர் எஸ். முரளி, சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா.நரேந்திரன், வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.ராஜேஷ் ஜெயின் எம்.சி, வட்டச் செயலாளர் பா.அண்ணாதுரை, பகுதி துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர், பாக முகவர் எல்.பவானி, எல்.சாந்தி லால், எம்.வருண்குமார், சத்தியா, கருப்பையா, லிங்கேஷ் ஆகியோர் வீடு வீடாக சென்று கழகத்தில் புதிய உறுப்பினர் சேர்த்தனர்.



வேளச்சேரி கிழக்கு பகுதி 179 வது வட்டத்தில் 198 வது பாகத்தில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர்கள் சேர்க்க வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் மற்றும் வட்ட கழக செயலாளர் ஆ. பாண்டியன் மற்றும் மாவட்ட கழக பிரதிநிதி எஸ். ரவிச்சந்திரன் வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர் மற்றும் பாக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வீடு வீடாக சென்று கழக தலைவர் ஆட்சியில் செய்த சாதனைகளை எடுத்துரைத்து இணைய வழியில் கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தனர்.

### சைதை 139 மற்றும் 142 க்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.4.50 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 10

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, வார்டு139 மற்றும் 142க்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 4.50 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை நேற்று (09.07.2025) தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 139க்குட்பட்ட மேற்கு ஜோன்ஸ் தெருவில் ரூ.72 இலட்சம் மதிப்பீட்டில் சாரதி நகர் பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மேம்பாட்டுப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, ஜாபர்கான்பேட்டை, ஆர்.வி. நகர், 69 மற்றும் 75வது தெருவில் ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் ஏற்கனவே உள்ள பழைய மழைநீர் வடிகால்களை இடித்துவிட்டு, புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, ராகவன் காலனி, 2வது லிங்க் தெருவில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் மருந்து சேமிப்புக் கிடங்கு கட்டுமானப் பணி ஆகியவற்றினைஅடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

தொடர்ச்சியாக, வார்டு142க்குட்பட்ட சம்பந்தம் தெரு, நடராஜன் தெருவில் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, மேற்கு ஜோன்ஸ் சாலை, இன்டஸ் மற்றும் ஷேன்சைன் அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சாலையோரப் பூங்கா மேம்படுத்தும் பணி ஆகியவற்றினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

பின்னர், சுப்பிரமணிய சாலையில் ரூ.16.40 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட 250 Kv திறன் கொண்ட மின் மாற்றியினை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், துணை மேயர் மு.மகேஷ் குமார், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திரு.ப.சுப்பிரமணி மண்டல அலுவலர்

ஜி.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி 98 ஆ வட்டத்தில் வில்லிவாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை கலைஞர் கருணாநிதி நகர் 11வது தெருவில் நடத்தினார். உடன் தேர்தல் பொறுப்பாளர் ஓ.ஏ.நாகலிங்கம் பகுதி செயலாளர் வே.வாசு வட்ட கழக செயலாளர் காஞ்சி.செ.துரை.பாகநிலை முகவர்கள் பூத் டிஜிட்டல் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### பெரம்பலூர் மாவட்ட மீனவரணி சார்பில்

# தலைவர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர்,ஜூலை 10-

பெரம்பலூர் மாவட்டத்தில் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்ட மீனவரணி சார்பில் வென்பாவூர் ஊராட்சியில் உள்ள தூய்மை பணியாளர்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு பேனா பென்சில் மற்றும் 200 மகளிருக்கு சேலைகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு மாவட்ட மீனவரணி அமைப்பாளர் வெள்ளுவாடி சி.ரவி வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்,பெரம்பலூர் சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்கள்.

இதில் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஸ்வரன், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செ. நல்லதம்பி,

மாவட்ட கழக பொருளார் செ. இரவிச்சந்திரன். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், ஒன்றிய அவைத்தலைவர் அம்பேத்கர்.

மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எம்.ரெங்கராஜ், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.அழகுவேல் செல்வம். மாவட்ட மீனவரணி துணைத் தலைவர் கோபாலபுரம் செல்வராஜ், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர்கள் வெங்கடாசாலம் வேல்முருகன், மெய்யன்துரை ,சின்னசாமி,

மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் அன்பரசு, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ராஜாராம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் தென்றல். ரவி, ஒன்றிய மீனவரணி அமைப்பாளர் ரவிக்குமார்,

ஒன்றிய மீனவரணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், சரவணன், உதயநிதி ஸ்டாலின் மன்ற துணை தலைவர் பிரகாஷ், அரும்பாவூர் முன்னாள் கவுன்சிலர் மோகன், முன்னாள் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செல்வம், காந்தி நகர் கிளை கழக செயலாளர் செல்வம், சோலை நகர் கிளை கழக செயலாளர் மாரிமுத்து, வென்பாவூர் கிளை கழக செயலாளர் ராமர் மற்றும் செல்வராஜ் முன்னாள் தலைவர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் விழாவில் கலந்து கொண்டுள்ளனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் மணப்பாக்கத்தில் தெருமுனை கூட்டம் நடைபெற்றது. அதனை முன்னிட்டு பகுதி செயலாளர் பா.குணாளன் ஆலோசனை வழங்கினார். இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி பிரகாஷ் தலைமை வகித்தார். பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கோ.பிரவீன் குமார் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் மணலி புதுநகர் பாகம் எண் 8 காந்திநகர் பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றதை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், மாவட்ட பிரதிநிதி, பா. சந்திரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு துரிதப்படுத்தினார்கள். பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், பகுதி மகளிர் தொண்ட அணி துணை அமைப்பாளர் சாந்தி, கார்த்திக் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.